hallo–
baselland.ch

BASEL LANDSCHAFT

# Basel-Landschaft மாநிலம்

குறுகிய விவரணம்
அரசியல் அமைப்பு
மதம்
ஓய்வு நேரம்

# குறுகிய விவரணம்

Basel-Landschaft மாநிலம் சுவிஸிலுள்ள 26 மாநிலங்களில் (உறுப்பினர் மாநிலங்கள்) ஒன்றாகும். இது அதன் சிறப்பு பன்முகத்தன்மையால் வகைப்படுத்தப்படுகிறது: தீண்டப்படாத இயற்கை நிலப்பரப்புகள் மற்றும் அழகான சிறிய நகரங்கள் முதல் கோட்டைகள் மற்றும் அரண்மனைகள் வரை, நகர்ப்புற தொழில்துறை பகுதிகள் வரை அனைத்தையும் பாசில் பகுதியில் காணலாம்.

## எண்ணிக்கைகளும் உண்மைகளும்

Basel-Landschaft மாநிலத்தில் 290'000 குடியிருப்பாளர்களில் கிட்டத்தட்ட 1/4 பகுதி வெளிநாட்டவர்கள். மாநிலப் பரப்பளவு 518 சதுர கி.மீ அதில் 5 பிராந்தியங்களும் (Bezirke) அதற்குள் 86 கிராமசபைகளும் (Gemeinden) அடங்கும். இதன் தலை நகரம் Liestal. அரசமொழி டொச். இந்த மாநிலம் ஜெர்மனி, பிரான்ஸ் மற்றும் அண்டை மாநிலங்களான Basel-Stadt, Aargau, Solothurn und மற்றும் Jura ஆகியவற்றின் எல்லையாக உள்ளது.

## வரலாறு

Basel-Landschaft மாகாணம் 1832 இல் Basel-Stadt இலிருந்து பிரிந்ததன் ஒரு பகுதியாக நிறுவப்பட்டது. இளம் மாநிலத்தின் ஆரம்ப நாட்கள் அரசியல் தகராறுகள் மற்றும் பொருளாதார கொந்தளிப்பால் வரையறுக்கப்பட்டன. ஆரம்பத்தில், Basel-Landschaft ஐரோப்பா முழுவதிலுமிருந்து, குறிப்பாக ஜெர்மனியில் இருந்து வரும் மக்களுக்குப் புகலிடமாக மாறியது. இரண்டாம் உலகப் போருக்குப் பின், பாசில் பொருளாதாரம் முன் எங்கும் காணாத வளர்ச்சியை அடைந்தது. Basel-Landschaft மாநிலம் சுவிட்சர்லாந்தில் மிக உயர்ந்த வளர்ச்சி விகிதங்களைப் பதிவுசெய்தது மற்றும் அதன் உள்கட்டமைப்பின் விரிவாக்கத்துடன் முன்னேறியது. இன்று, Basel-Landschaft மாகாணம் இன்னும் கிராமப்புறமாக உள்ளது, ஆனால் வாழ்க்கை அறிவியலில் கவனம் மற்றும் உலகளாவிய தலைமையைக் கொண்ட பெரிய சர்வதேச நிறுவனங்கள் மற்றும் பல சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (KMU) கொண்ட ஒரு தொழில்துறையைக் கொண்டுள்ளது,

## சம்பிரதாயமும் பாரம்பரியமும்

சில சமயங்களில் வலுவான தொழில்மயமாக்கல் மற்றும் நகரமயமாக்கல் இருந்தபோதிலும், Basel-Landschaft மாநிலம் ஒரு வண்ணமயமான பாரம்பரியம் மிகுந்த மாநிலமாக வரையறுக்கப்படுகிறது. உள்ளூர் மக்கள் தங்கள் பாரம்பரியங்களை ஆர்வத்துடன் பராமரிக்கிறார்கள் மற்றும் இந்த பண்டிகைகள் மற்றும் பழக்கவழக்கங்களை நீங்கள் அறிந்தால் மகிழ்வார்கள். பிராந்தியம் முழுவதும் மிகவும் முக்கியமானதும், பிப்ரவரி அல்லது மார்ச் மாதங்களில் நடைபெறக் கூடியதுமாகிய பாஃநாஃட் (Fasnacht) பண்டிகைக்குக் கூடுதலாக, ஈஸ்டர் அன்று "Eierläset"அல்லது அசென்சன் நாளில் "Banntag" ஆகியவை மாநில பாரம்பரிய பழக்க வழக்கங்கள் ஆகும்

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselland.ch/ta/canton-basel-landschaft/brief-portrait

# அரசியல் அமைப்பு

சுவிஸ் அரசியல் நிலை 3 தலைப்புகளாக இருக்கின்றன: மத்தியஅரசு, மாநிலம் (உறுப்பினர் மாநிலங்கள்) மற்றும் கிராமசபைகள். சுவிஸ்பிரசைகள் தமது அரசியல் நிலைகளை வாக்களிப்தன் மூலம் தீர்மானிப்பர்.

## சுவிஸ் மத்திய அரசு

சுவிஸ் இணைந்தநாடானது 1848 ஆண்டிலிருந்துள்ளது. தலைநகரம் பேர்ண். சுவிஸ் இனரீதியாக, மொழி மற்றும் சமயரீதியாக ஒன்றையே கொண்டிருக்கவில்லை. வேவ்வேறு கலாச்சாரங்கள் சுயாதீனமாக பிணைந்திருப்பதன் காரணமாக "விருப்பமான தேசியம்" (Willensnation) ஆக கூறப்படுகிறது. சுவிஸ் சர்வதேச அரசியல் ரீதியாக நடுநிலையைப்பேணி வருகிறது.

## கூட்டாட்சித்தத்துவம்

சுவிஸ் மாநிலங்கள் மற்றும் கிராமசபைகள் என்பன பெரும்பாலும் சுயாதீனமானவை, இதை ஒரு கூட்டாட்சித்தத்துவம் எனலாம். 26 மாநிலங்கள் மற்றும் 2000ற்கு மேற்பட்ட கிராமசபைகள் என்பன முற்றாக அரசின் சட்டதிட்டங்களுட்பட்டவையாக உள்ளன. Basel-Landschaft மாநிலம் சொந்தமான அரசியல்அடிப்படையையும் அரசையும், ஒரு பாராளுமன்றத்தையும் ஒரு நீதிமன்றத்தையும் கொண்டிருக்கின்றது. பெரும்பாலான அரசின் நடைமுறைகளுக்கு மாநிலம் அல்லது கிராமசபையே பொறுப்பாயுள்ளன. இதனால் உதாரணமாக பாடசாலை நடைமுறை மாநிலத்திற்கு மாநிலம் வித்தியாசமான முறையில் வரையறுக்கப்பட்டுள்ளன. மத்திய அரசின் சட்டங்கள் நாடு முழுவதற்கும் செல்லுபடியாகும்போது, மாநிலத்தால் உருவாக்கப்படும் சட்டம் அம்மாநில பிரதேசத்திற்கு மட்டுமே பொருந்தக்கூடியதாக உள்ளது. ஒவ்வொரு செயற்பாடுகளும் மாநிலம், கிராமசபை மற்றும் மத்திய அரசையும் தொடர்புபடுத்துவதாகவே இருக்கும்.

## அதிகாரப்பிரிப்பு

அதிகாரம் குவிவதை தடுக்குமுகமாக அரசானது சுவிஸ் மற்றும் மாநிலங்களில் மூன்று சுயாதீனமான தெரிவுகளை பிரித்துவைத்துள்ளது : சட்டத்தை உருவாக்குபவர் தெரிவு, சட்டத்தை நிர்வகிப்பவர் தெரிவு, மற்றும் நீதித்துறைத்தெரிவு. Basel-Landschaft மாநிலத்தில் பின்வரும் நிர்வாகங்கள் இந்த செயற்பாட்டை நடைமுறைப்படுத்துகின்றன:

- சட்டமன்றம்: மேல்சபை (Landrat) (90 அங்கத்தவர், 4 வருடங்களுக்கொரு முறை மக்களால் தெரிவு செய்யப்படுவர்
- நிறைவேற்றல்சபை: ஆளுனர் சபை (Regierungsrat) (5 அங்கத்தவர், 4 வருடங்களுக்கொருமுறை மக்களால் தெரிவு செய்யப்படுவர்)
- நீதிச்சபை: மாநில ரீதியாக உள்ள வேறுவேறான நீதிமன்றங்கள் மற்றும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் (Zivilkreisgerichte).

அத்துடன் கிராமசபைகளிலும் சட்டசபைகள் (கிராமசபைக்கூட்டங்கள் அல்லது பாராளுமன்றம், (Gemeindeversammlung, Parlament), மற்றும் ஒரு நிர்வாகி (நகரபிதா அல்லது கிராமசபைபிரதிநிதி, Stadtrat, Gemeinderat) என்பன காணப்படுகின்றன. மத்திய நிர்வாக ரீதியில் சட்டமன்றம் 2 சபைகளை கொண்டுள்ளது: தேசிய மற்றம் நிர்வாகப்பிரதிநிதிகள் (National- und Ständerat). தேசிய அரசு (7 அங்கத்தவர்கள்) என்பது மத்திய அமைச்சர்கள் (Bundesrat). அத்துடன் தேசியரீதியிலும் வேறுவேறான நீதிமன்றங்கள் உள்ளன. உச்சநீதிமன்றமானது மிகவும் உயர்ந்தநிலையில் இருப்பதுடன் உதாரணமாக மாநில நீதிமன்றங்களின் தீர்ப்புக்களை மீளாய்வுக்கு தொடர்ந்து ஆராய அனுப்பக்கூடியதாக இருக்கிறது.

## ஜனநாயக உரிமைகள்

சுவிஸ் பிரஜைகள் தெரிவு - மற்றும் வாக்களிப்புக்கு தகுதி பெற்றவர்களாயுள்ளனர். அவர்கள் கிராமசபை, மாநில மற்றும் தேசிய மட்டத்தில் அரசியல் தீர்மானங்களை தெரிவு செய்யவும் அத்துடன் தாமாகவே தெரிவு செய்வதற்காக முன்வைக்கவும் முடியும். அத்துடன் பிரசைகள் கிராம, மாநில மற்றம் தேசிய ரீதியான அரசியல் நடைமுறைகளை தெரிவு செய்யமுடியும்.(நேரடியான உரிமை). சர்வசபை வாக்கெடுப்பு மூலம் மக்களால் தமது சொந்த விருப்புகளை வாக்கெடுப்புக்கு உள்ளாக்கலாம். Basel-Landschaft மாநிலத்தில் வாழும் வெளிநாட்டினருக்கு வாக்களிக்கும் உரிமை இல்லை. அவர்கள் தமது அரசியல் விருப்புகளை வேண்டுகோள் மூலம் நிர்வாகங்களிடம் சமர்ப்பிக்கலாம். கூடுதலாக பெரும்பாலும் கமிஷன்கள், ஒரே ஆர்வம் உள்ள குழுக்கள் அல்லது வசிப்பிட கழகங்களில் ஈடுபட வாய்ப்புள்ளது

## அடிப்படை உரிமை

அதிகூடிய அடிப்படைச்சட்டக் கொள்கைகள் சுவிஸின் கூட்டாட்சி அரசியலமைப்பில் (Bundesverfassung) உறுதி செய்யப்பட்டுள்ளது. கூட்டாட்சி அரசியியலமைப்பின் ஒரு முக்கியமானதாக ஐரோப்பிய மனித உரிமைகள் தொடர்பான மாநாட்டில் (EMRK) எடுக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் அமைகின்றன. இவை மனிதனின் இருப்புகளைப் (உதாரணத்திற்கு வாழ்க்கைக்கான உரிமை, அவசர நிலையில் உதவிக்கான உரிமை) பாதுகாப்பதுடன் மற்றும் தனிப்பட்டவர்களுக்கெதிரான அரச வன்முறை அல்லது பெரும்பான்மையோருக்கு எதிரான குழுக்களின் வன்முறைகள் என்பவற்றிலிருந்து பாதுகாக்கிறது. எவருக்கும் அவர்களின் பிறப்பிடம், இனம், மதம், பாலினம் அல்லது பாலியல் போக்கிற்குப் பாரபட்சம் காட்டக்கூடாது என்பதை உத்தரவாதம் செய்கிறது . Basel-Landschaft மாநிலத்தில் இனப்பாகுபாட்டினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவச ஆதரவு மற்றும் ஆலோசனை வழங்கப்படுகிறது. சுவிஸில் சமயம், கருத்து வெளியிடுதல், மற்றும் பத்திரிகைச் சுதந்திரம் உள்ளன.

### மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselland.ch/ta/canton-basel-landschaft/political-system

# மதம்

சுவிஸ் ஒரு பாரம்பரிய கிறிஸ்தவ நாடு. ஆயினும் இன்று பல வேறு மதங்களைச் சேர்ந்த அதிக மக்கள் சுவிஸில் வாழுகிறார்கள். மதச் சுதந்திரம் உறுதிப்படுத்தப் பட்டிருப்பதுடன் அரச பாடசாலைகள் மதச் சார்பற்றவை.

## மதமும் அரசும்

சுவிஸ் பாரம்பரியமான கிறிஸ்தவ நாடாகும். மாநிலங்களே மதம் மற்றும் மாநிலத்திற்கான தொடர்புகளை தீர்மானிக்கும். பெரும்பாலான டொச் மாநிலங்கள், Basel-Landschaft மாநிலம் உட்பட,- கிறிஸ்தவ சமயகூட்டமைப்பை பகிரங்க சட்டபூர்வ நிறுவனங்களாக (தேவாலயங்கள், Landeskirchen) அங்கீகரத்துள்ளன. இதன் கருத்து மாநிலம் இவற்றிற்கு குறிப்பிட்ட உரிமைகளைக் கொடுத்துள்ளது. இதன்மூலம் உதாரணமாக தமது அங்கத்தவரிடமிருந்துவரியைப் பெற்றுக்கொள்ளலாம். Basel-Landschaft மாநிலத்தில் றோமன் கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து மற்றும் கிறிஸ்தவ கத்தோலிக்க தேவாலயங்கள் உள்ளன.

## Basel-Landschaft மாநிலத்தில் மத சமூகங்கள்

Basel-Landschaft மாநிலத்தில் பொதுவான சட்டப்படி அங்கீகரிக்கப்பட்ட மதத்தைத் (தேவாலயங்கள் ) தவிர மேலும் பல மதச் சமூகங்கள் உள்ளன. பெரும்பாலான Basel-Landschaft குடிமக்கள் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்கள். இருப்பினும், கடந்த வருடங்களில், மற்ற மதங்களைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. மேலும் தாங்கள் எந்த மதப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று உணராத குடியிருப்பாளர்களின் விகிதமும் அதிகரித்து வருகிறது.

## மதச்சுதந்திரம்

சுவிசின் அரசியலமைப்பு மதச்சுதந்திரத்துக்கு உத்தரவாதமளிக்கிறது. ஒவ்வொருவரும் தமது சொந்த மதத்தை பேணவும் அதைப்பரப்பவும் உரிமையுள்ளது. எவரும் மதத்தில் இணைவதற்கும், மதசெயற்பாடுகளில் பங்கொடுக்கவும் நெருக்கடி கொடுக்கமுடியாது. மக்கள் ஒன்றாகக்கூடி தமது சமய வழிபாடுகளை கொண்டாட முடியும். எவரும் தமது மதம் அல்லது நம்பிக்கையை அவமதிக்கக்கூடாது.

## மதமும் பாடசாலையும்.

கட்டாயப்பாடசாலை மதச்சார்பற்றது. அதன் அர்த்தம் சமயப்பாடம் படிப்பிற்பதில்லை என்பதல்ல .சமயப்பாடத்தில் இரு வகையுண்டு. இவையாவன : மதப்பிரிவுள்ள தேவாலய சமயபாடம் மற்றும் பாடசாலைச் சமயப்பாடம் "நன்நெறியும் மதங்களும் " இந்தப் பாடத்தில் அனைத்து மனிதர்களுடன் சம்பந்தப்பட்ட மதமும் நன்நெறியும் பற்றிய கேள்விகள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. இது ஆரம்பப்பாடசாலையிலும் 1ம் மேற்பிரிவிலும் கட்டாயப்பாடமாகும். மதப்பிரிவுள்ள தேவாலயச் சமயபாடத்திற்குப் போவது தன்னிச்சையானது. வேறு மதங்களைச் சார்ந்த பிள்ளைகளுக்குப் பாடசாலை தவிர்ந்த நேரங்களில் மதச்சமூகங்கள் மூலம் தமது மதங்களைப் படிக்கலாம்.

மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselland.ch/ta/canton-basel-landschaft/religion

# ஓய்வு நேரம்

Basel-Landschaft மாநிலத்தில் ஓய்வு நேரத்தை களிப்பதற்கு பல கவர்ச்சியான வசதிகள் உள்ளன. இதில் முக்கியாமானவை கழகங்களாகும். இவை வௌ;வேறு மனிதர்களை அறிந்துகொள்ள சந்தர்ப்பங்களை வழங்குகின்றன.

## கழகங்கள்

Basel-Landschaft மாநிலத்தில் அதிகமான குடியிருப்பாளர்கள் ஏதோ ஒரு கழகத்தில் (Verein) அங்கத்தவராயிருப்பார்கள்.பல வகைப்பட்ட ரசனைக்கேற்ப அதிக கழகங்கள் உள்ளன. சிறிய கிராமசபைகளில் கூட விளையாட்டு - கலாச்சாரம் மேலும் பல கழகங்கள் உள்ளன. அவை மனிதர் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்ள சிறந்த சந்தர்ப்பங்களை ஏற்படுத்துகின்றன.அதிகமான கழகங்கள் அனைத்து மக்களுக்காகவும் திறந்துள்ளன. கழகங்கள் பற்றிய தகவல்களை கிராமசபைகளின் இணையத்தளங்களில் தேடலாம்.

## இளையவர்களுக்கான வசதிகள்

Basel-Landschaft மாநிலத்திலுள்ள இளையவர்கள் தமது ஓய்வு நேரத்தைக் கழிக்கவும் தமது வயதையொத்தவர்களுடன் பழகிக் கொள்ளவும் எனப் பல விசேட வசதிகள் உள்ளன. அதிகமான கிராமசபைகளில் ஓய்வு நேரச் சலுகைகளுடன் கூடிய சந்திப்புக்கள் உள்ளன. இங்குள்ள இளையவர்களைப் பராமரித்து அவர்கள் எண்ணங்களைச் சேர்த்து செயற்திட்டமாக்குவார்கள் (Jugendarbeit). இச் சலுகை வழக்கமாக இலவசமானது. இளைஞர் அமைப்புகளில் ஒரே வயதினர் சேர்ந்து தடகள இயற்கை விளையாட்டுக்களில் பங்கெடுப்பார்கள். இதைக் கழகங்கள் கிராமசபைகள் அல்லது தேவாலயங்கள் நடத்தலாம். இந்த சலுகைகள் அனைத்து இளையோருக்கும் உரியது. வதியும் கிராமசபைகளில் மேலதிக விபரங்களை அறியலாம்.

## சுற்றுலாவும் கலாச்சாரமும்.

Basel-Landschaft மாநிலம் பலவிதமான சுற்றுலாவசதிகளையும் பெருமளவு கலாச்சார வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுக்கிறது. தனித்துவமான யூரா நிலப்பரப்பில் பல அழகான மலையேறும் பயணங்களும், மிதிவண்டி சுற்றுலாக்களும் உள்ளன. எடுத்துக்காட்டாக, ரோமானிய நகரமான Augusta Raurica , "Wasserfallen" பகுதி அல்லது ரயின் நதியைப் போலவே Basel-Landschaft மாநிலத்தைச் சேர்ந்த பல அரண்மனைகள் மற்றும் கோட்டைகள் பிரபலமான சுற்றுலா இடங்கள் ஆகும். Baselland சுற்றுலா, உல்லாசப் பயணங்கள் மற்றும் நிகழ்வுகள் பற்றிய தகவல்களை வழங்குகிறது. தற்போதைய கலாச்சார நிகழ்வுகள் பற்றிய தகவல்களை உள்ளூர் செய்தித்தாள்களிலும் காணலாம்.

## விரும்பிவேலைசெய்தல்

விரும்பிவேலைசெய்தல் (Freiwilligenarbeit) என்பது மனிதர்களுக்கும் சூழலுக்கும் இலவசமாக வழங்கும் சமூகரீதியான அர்ப்பணிப்பு. பெருமளவு வேலைகள் சுவிசில் பாரம்பரியமாக விரும்பி வேலை செய்யப்படுகின்றன. பெரும்பாலான வேலைகள் கழகங்களுக்குள் செய்யப்படுகின்றன. இதன்மூலம் கழகங்கள் கலாச்சாரம், விளையாட்டு, சமூக நலன்கள், கல்வி, மிருகங்கள்- மற்றும் சுற்றாடல்பாதுகாப்பு, சுகாதாரம் மறறும் பல வகைகளிலும் ஈடுபடுகின்றன. விரும்பி வேலை செய்பவர்கள் மற்றும் வேலைசெய்யும் சந்தர்ப்பங்கள் பற்றிய தகவல்களை விரும்பி வேலைசெய்யும் விசேடநிலையம் Benevol, சுவிஸ் செஞ்சிலுவைச்சங்கம் Baselland ல் (SRK) அல்லது இரண்டு பாசிலுக்குமான காரிடாஸ் (Caritas beider Basel) பெற்றுக்கொள்ளலாம்.

## விளையாட்டு ஃ கலாச்சாரம்ஃகல்வி

Kulturlegi உடன் - வருமானம் குறைந்தவர்களுக்கு கிடைக்கும் இந்த அடையாள அட்டையுடன் விளையாட்டு - கலாச்சார - கல்வி நிகழ்ச்சிகளில் குறைந்த செலவில் பங்குபற்றலாம். இந்த அடையாள அட்டைக்கு கரித்தாஸில் விண்ணப்பிக்கலாம். கரித்தாஸ் விண்ணப்பத்தைப் பரிசோதித்த பின்பு முரடவரசடநப௶ பெறத் தகுதியுள்ளவரா என்பதை அறிவிக்கும். மேலும் ஒரு சலுகையாக, குடும்ப பாஸ் (Familienpass) வடமேற்கு சுவிட்சர்லாந்தில் உள்ள குடும்பங்களுக்கு பரந்த அளவிலான தள்ளுபடிகள் அல்லது இலவச சலுகைகளை வழங்குகிறது. குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் இளைஞர்களுக்கு "வண்ண சாவி" அல்லது விடுமுறை பாஸ் (விடுமுறை பாஸ்) போன்ற ஏராளமான தள்ளுபடிகள் மற்றும் இலவச சலுகைகள் உள்ளன. குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் இளம் வயதினர்களுக்கு "வண்ண சாவி"(Colour Key) அல்லது விடுமுறை பாஸ் (Ferienpass) போன்ற ஏராளமான தள்ளுபடிகள் மற்றும் இலவச சலுகைகள் உள்ளன.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselland.ch/ta/canton-basel-landschaft/leisure